# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## முதலாம் தவணைப்பரீட்சை – 2019

| தரம் - 11 | வரலாறு – I | நேரம் :- 1.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ..............................

### பகுதி – I

❖ **கவனிக்குக.**

**(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்**
**(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
**(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது சரியான விடையின் இலக்கத்தை உரிய வட்டத்தினுள்ளே புள்ளடியை (X ) இடுக.**
**(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றை பின்பற்றுக.**

01. கி.பி 4ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட இலங்கையின் மிகப் பழமையான உள்நாட்டு இலக்கிய மூலாதாரமாகக் கருதப்படும் நூல்.
1) மகாவம்சம் 2) தாதுவம்சம் 3) தீபவம்சம் 4) சூளவம்சம்

02. இலங்கையின் கம்பளை முதல் கோட்டை இராசதானி வரையிலான ஆட்சிக்காலங்களின் அரசியல் தகவல்களை உள்ளடக்கியுள்ள நூலினைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிவு செய்க.
1) ராஜாவலிய 2) பூஜாவலிய 3) பெரகும்பசிரித்த 4) நிக்காய சங்கிரகய

03. நாடு ஒன்றின் வரலாற்றை அறிந்து கொள்வதற்காக இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் எவை.
1) நூல் எழுதப்பட்ட காலம் , நூல் ஆசிரியரின் நோக்கம்
2) கலைத்திறனை வெளியிடும் முறை, தனித்துவத்தினை எடுத்துக்காட்டும் முறை
3) கட்டட நிர்மானம், நூலுக்கான தகவல் திரட்டப்பட்ட முறை
4) புராதன மனிதனின் வாழ்க்கைத் தகவல்கள், நூல் அசிரியர்

04. “ரிபைரோவின் இலங்கை வரலாறு” என்னும் நூலை எழுதிய ரிபைரோ என்பவரின் தாய் நடாகக் கருதப்படுவது.
1) சீனா 2) போர்த்துக்கல் 3) பிரித்தானியா 4) ஒல்லாந்து

05. கி.பி 90-168 காலப்பகுதியில் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த உரோம இனத்தவரான குளோடியஸ் தொலமி அவர்களால் வரையப்பட்ட உலகப் படத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்ட பெயர்.
1) செரண்டிப் 2) சைலான் 3) சிலோன் 4) தப்ரபேன்

06. சீனாவின் சன் - சீ என்னும் பிரதேசத்தில் பிறந்து கி.பி 5ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகை தந்து அபயகிரி விகாரையில் மூன்று ஆண்டுகளாகத் தங்கியிருந்து கல்வி கற்றார் எனக் குறிப்பிடப்படுபவர்.
1) ஹியுங்சாங் பிக்கு 2) கொன்பியூசியஸ் 3) பாஹியன் தேரர் 4) யுவான் சொன்கான்


kalvi.lk

07. புராதன காலத்தில் பயன்படுத்தப் பட்டதாகக் கருதப்படுகின்ற நாணயங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளக் கூடிய விடயங்கள்.

1) பொருளாதார வளர்ச்சி, எதிர்கால சந்ததியினர்
2) பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப அறிவு
3) தனித்துவம், ஆட்சியாளர் செயற்பாடுகள்
4) வரலாற்றைக் கட்டியெழுப்புதல், நாட்டின் பரிணாம வளர்ச்சி

08. இலங்கையின் 38000 வருடங்களுக்கு முன்னர் தாழ்நில ஈரவலயத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்தமை தொடர்பான முக்கியம் வாய்ந்த தரவுகளைத் தருகின்ற குகை.

1) பட்ட தொம்பலென 2) கித்துள்கல
3) பெலிலென 4) பாகியன்கல

09. இலங்கையின் முன்வரலாற்றுக் கால பண்பாட்டைக் கற்பதற்கான பிரதான ஆதாராமாக விளங்குவது இறந்தவர்களுக்கு என அமைக்கப்பட்ட மெகாதிலிக் மயானங்களாகும். இந்த மரணச்சடங்கு முறைகளில் அஸ்தியுடன் கூடிய சிறிய பாத்திரங்கள் பெரிய பாத்திரங்களினுள் வைத்து பாதுகாக்கப்பட்டுள்ளன. இவ்வாறான மயானங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பெயர்.

1) கல்லறை மயானங்கள் 2) களிமண் ஓட கல்லறை மயானங்கள்
3) பரணி மயானங்கள் 4) அஸ்திவைக்கப்பட்ட கல்லறை மயானங்கள்

10. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்த கல்லாயுத தொழில் நுட்பத்திலிருந்து விடுபட்டு உலோக மட்பாண்டங்கள் செய்யும் தொழில் நுட்பத்திற்கு மாற்றமடைந்தமை ஆரம்பமான காலம்.

1) முன் வரலாற்றுக் காலம் 2) ஆரம்ப வரலாற்றுக் காலம்
3) வரலாற்றுக் காலம் 4) அண்மைக்காலம்

11. கி.மு 2400 வருடங்களுக்கு முன்பிருந்தே இலங்கையில் முன்னேற்றகரமான விவசாய சமூகம் ஒன்று இருந்துள்ளது என்பதற்கான ஆதாரங்கள் கண்டெடுக்கப்பட்ட பிரதேசங்கள்

1) இபன்கட்டுவ, சிகிரியா அலிகல
2) சிகிரியா பொத்தான பிதுருங்கல
3) உடரஞ்சாமடம், சொல்கைன்
4) பெரகல, ஹிந்துமுல்ல.

12. இலங்கையில் அரசுக்கு முற்பட்ட காலத்தில் சிறிய பிரதேசங்களில் சொத்துள்ள செல்வந்த பிரபுக்களாக ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள்.

1) கமிக 2) பருமக 3) கம்லத்தன் 4) குர்க்கபதி

13. ஆட்சிப் பிரதேசத்தினை நிர்வாக மாவட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாவட்டங்களையும் நிர்வகிப்பதற்கு அமைச்சர்களை நியமித்ததாக கருதப்படும் மன்னன்.

1) துட்டகைமுனு 2) பண்டுகாபயன்
3) தேவநம்பிய தீசன் 4) வசபன்

14. இந்து சமுத்திரத்தில் மேற்கை மையமாகக் கொண்டு நடைபெற்ற சர்வதேச வியாபாரம் கிழக்கிற்கு நகர்ந்தமையைக் கருத்தில் எடுத்து இலங்கையின் தலைநகரத்தினைப் பொலன்னறுவைக்கு மாற்றி தூர நோக்குடன் செயற்பட்ட மன்னன்.

1) முதலாம் பராக்கிரம பாகு 2) நிசங்க மல்லன்
3) முதலாம் விஜயபாகு 4) இரண்டாம் விஜயபாகு



kalvi.lk

15. கீழே A தொடக்கம் E வரை இலங்கையின் புராதன வைத்தியத்துறையுடன் தொடர்புபட்ட விடயங்கள் தரப்பட்டுள்ளன.

A) உபசக்க ரோக நாச

B) பஸவந்தி நாமசால

C) வைத்தியசாலைகள் நிர்மாணிப்பு

D) வைத்தியசாலைகளுக்குத் தேவைப்பட்ட வசதிகளை வழங்குதல்

E) சொத்தி சாலா

இவற்றினை அவதானித்து பண்டுகாபயன், முதலாம் உபதிஸ்ஸ, நான்காம் காசியப்பன் போன்ற மன்னர்களுடன் தொடர்புடைய விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

1) C, D, A  2) A, E, B  3) D, B, A  4) E, B, A

16. புராதன காலத்தில் இலங்கையின் கிழக்குக் கரையில் அமைந்திருந்த துறைமுகங்களைத் தரும் விடையினைத் தெரிவு செய்க.

1) உருவெல, மகாதித்த  2) சல்வத்தொட்ட, கிம்மதித்த
3) பல்லவங்க, கோகண்ணதித்த  4) சுகரதித்த, ஜம்புகோளப்பட்டினம்

17. சேனைச் செய்கையில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் A பகுதியிலும் அதன் பொருள்கள் B பகுதியிலும் தரப்பட்டுள்ளன. அவற்றினை அவதானித்துச் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| 1. தண்டு வெட்ட | A. கைவிடப்பட்டு மீளவும் பயிரப்படும் நிலம் |
| 2. பெல | B. புதிதாக தீயிடப்பட்ட காணி |
| 3. கனத்த | C. கம்புகளாலான ஆன வேலி |
| 4. நவதெனி | D. உயர் மரம் ஒன்றில் கட்டப்பட்ட சிறு குடிசை |

1) C, D, A, B  2) A, B, C, D  3) B, C, A, D  4) A, D, B, C

18. “விண்ணிலிருந்து பொழியும் ஒரு துளி நீரேனும் மனிதனுக்குப் பயன் படாது கடலில் கலக்க விடமாட்டேன்” என்னும் கூற்றுடன் தொடர்புடைய மன்னன்.

1) மகாசேனன்  2) தாதுசேனன்
3) வசபன்  4) முதலாம் பராக்கிரம பாகு

19. திரிபீடக நூலுக்கு மேலதிக விளக்கமான அட்டுவாக்களை எழுதிய புத்த கோச தேரர் கல்வி கற்ற விகாரை.

1) மகாவிகாரை  2) அபயகிரிவகாரை
3) ஜேத்வனராமய  4) ஆலாகான பிரிவேனா

20. கி.பி 7ஆம் நூற்றாண்டில் ஈராக்கின் கூபா நகரத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த எழுத்து.

1) பிராமி  2) திராவிடம்  3) கியுபிக்  4) பாளி

21. வெள்ளை நிறப் பின்னணியில் செந்நிறக் கோடுகள் வரையப்பட்ட மடக்கு என்னும் மட்பாண்டம் கண்டெடுக்கப்பட்ட இடம்.

1) இபன்கட்டுவ  2) கல்சொகன்  3) பிதுருங்கல  4) உடரஞ்சாமடம்



kalvi.lk

22. அலைகளினால் ஏற்படும் அழுத்தத்தால் அணைக்கட்டு அரிப்படைவதனைத் தடுப்பதற்காக குளததில் அமைக்கப்பட்ட உறுப்பு.
 1) கலிங்கல் தொட்டி 2) சுருங்கை 3) மடைக்கதவு 4) அலைதாங்கி

23. கி.பி 9ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த அரசர்களின் பரம்பரை (வம்சம்)
 1) இலம்ப கர்ணவம்சம் 2) மானவர்மன்வம்சம்
 3) மோரிய வம்சம் 4) பரணவம்சம்

24. உயர் நிலங்களில் உள்ள மரங்களை வெட்டக்கூடாதென அநுராதபுர கல்வெட்டில் பொறிப்பித்த மன்னன்.
 1) மூன்றாம் உதயன் 2) நிஸங்க மல்லன்
 3) நான்காம் மகிந்தன் 4) ஐந்தாம் காசியப்பன்

25. இராசரட்டை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின்பு வடபகுதியில் உருவான பிரதான பிரதேச ஆட்சி அலகு.
 1) தொலஸ்பரட்டை 2) மாகமை 3) கோட்டை 5) வன்னி

26. 1ஆம் புவனேகபாகு மன்னன் தலைநகரமாக்கிய பிரதேசம்.
 1) தம்பதெனியா 2) யாப்பாகுவா 3) குருநாகல் 4) கம்பளை

27. கி.பி 1409 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த சீனத்தளபதி யுங்கோவினால் பொறிக்கப்பட்ட காலி மும்மொழிக் கல்வெட்டில் உள்ள மொழிகள்.
 1) சீனம், பாரசீகம், பாளி 2) பாளி, ஆங்கிலம், சமஸ்கிருதம்
 3) சீனம், பாரசீகம், தமிழ் 4) தமிழ், பாளி, சீனம்

28. கண்டி இராசதானிக் காலத்தில் அரசனுக்குச் சொந்தமாக இருந்த நிலம் பல்வேறு தேவைகளுக்காகவும் வகைப்படுத்தப்பட்டிருந்தது. நிலங்களின் பாகுபாடுகளுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் அட்டவணையின் A பகுதியிலும் அதன் பயன்பாடு தொடர்பான விபரங்கள் B பகுதியில் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன. A பகுதிக்கேற்ப B பகுதியை ஒழுங்கு படுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| கண்டி இராசதானியின் நிலவகைப் பாடு<br>A | நிலங்களின் பயன்பாடு<br>B |
|---|---|
| 1. கபடாகம் | A. கிராமத் தலைவர்கள் பரம்பரையாக அனுபவித்த நிலம் |
| 2. நிபந்தகம் | B. அரச மாளிகை தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டவை |
| 3. பிரவேனிகம் | C. விகாரைகளுக்குத்தானமளிக்கப்பட்டவை |
| 4. விகாரகம் | D. பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்ட நிலம் |

 1) B, D, A, C 2) B, A, C, D 3) A, B, D, C 4) D, C, B, A

29. கண்டி இராச்சியத்தில் அதிகளவான நிலம் பயன்படுத்தப்பட்டிருந்த பயிர்ச் செய்கை.
 1) நெல் 2) குரக்கன் 3) சேனைச்செய்கை 4) கறுவா

30. மறுமலர்ச்சிக்காலத்தில் இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் வாழ்ந்து கலைகளின் வளர்ச்சிக்கு அனுசரணை வழங்கிய செல்வந்த குடும்பத்தினர்.
 1) ரொமனோ (Romano) 2) றிச்சி (Ricci)
 3) பியான்சி (Bianchi) 4) மெடிசி (Medici)


kalvi.lk

31. மறுமலர்ச்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட கலைப்படைப்புக்களில் மையப்பொருளாக இருந்த விடயங்கள்.
1) தனியார்மயமாக்கம், உலகியல் ரசனை
2) சமயக்கருத்துக்கள், வகுப்பு ரீதியான பாகுபாடு
3) தனியார் மயமாக்கம், சமயக்கருத்துக்கள்
4) உலகியில் ரசனை, சமயக்கருத்துக்கள்.

32. ஆசியாவுக்கான புதிய பாதையைக் கண்டறிவதில் முதலிடம் வகித்த ஐரோப்பிய நாட்டவர்.
1) பிரித்தானியர் 2) ஒல்லாந்தர் 3) போர்த்துக்கேயர் 4) பிரான்சியர்

33. ஆசியாவிற்கு வருகை தந்த ஒல்லாந்தரின் கீழைத்தேச மத்திய நிலையமான பத்தேவியா அமைந்திருந்த தீவு.
1) சுமாத்திராத்தீவு 2) பப்புவா நியூகினித்தீவு
3) சம்பாத்தீவு 4) ஜாவாத்தீவு

34. 18 ஆம் நூற்றாண்டில் குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகளின் தொகுதியைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிவு செய்க.
1) பிரான்ஸ், பெல்ஜியம், ஒல்லாந்து
2) பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பானியா
3) பிரான்ஸ், ஒல்லாந்து, போலந்து
4) சுவீடன், ஸ்பானியா, ரஷ்யா

35. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிக்கும் அரசின் தலையீட்டைக் குறைந்தளவினதாக்கும் தலையிடாக் கொள்கையை முன்வைத்தவர்.
1) மாட்டின் லூதர் 2) இராஸ்மஸ் 3) அடம்ஸ்மித் 4) ஜோன் விறஸ்

36. 1876 ஆம் ஆண்டு இரண்டு இடங்களுக்கு இடையில் கேபிள் கம்பி ஊடாக வாய்மொழியாக கருத்து பரிமாற்றக்கூடிய தொலைபேசியைக் கண்டறிந்தவர்.
1) கலிலியோ கலிலி 2) அலெக் சாண்டர் கிரகம் பெல்
3) குக்லி மார்க்கோனி 4) ரைட் சகோதரர்கள்.

37. சென்னை நிர்வாகத்தினால் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை நிர்வகிக்க அனுப்பப்பட்ட வதிவிடப் பிரதிநிதிகளான கலெக்டர் எனப்பட்டவர்களின் நிர்வாக மையம்.
1) பிரதேச செயலகம் 2) உதவி அரசாங்க அதிபர் காரியாலயம்
3) கச்சேரி 4) மாகாண செயலகம்

38. 1978 இல் இருந்து 1802 வரை இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் நிலவிய ஆட்சி முறை
1) மன்னராட்சி 2) பிரதேச நிர்வாகம் 3) சென்னை ஆட்சி 4) இரட்டை ஆட்சி

39. இரத்மலானை பரமதம்ம சேதிய பிரவேனாவை ஆரம்பித்த தேரர்.
1) ஹக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் 2) வலானை சித்தார்த்த தேரர்
3) தர்மாலோக்க தேரர் 4) மீகெட்டுவத்தே குணானந்த தேரர்.

40. துறவிகளையும் இல்லறத்தாரையும் ஒன்றுபடுத்தி பௌத்த பிரம்மஞான சங்கத்தினை இலங்கையில் 1880 ஆம் ஆண்டில் ஆரம்பித்தவர்.
1) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
2) வஸ்கடுவே ஸ்ரீ சுபுதி தேரர்
3) அமாரிஸ்த சில்வா படுவன் துவாட
4) ஸ்ரீ தர்மா லோக தேரர்.

(40x2=80புள்ளிகள்)



kalvi.lk

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## முதலாம் தவணைப் பரீட்சை– 2019

| தரம் - 11 | வரலாறு - II | மூன்று மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம் |
|---|---|---|

சுட்டெண் :- ..............................

- ❖ **பகுதி I இல் முதலாம் வினா கட்டாயமானது.**
- ❖ **பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**
- ❖ **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி – I

01)

(அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள் உலகப் புறவுருவப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i) மல்வத்து ஓயா, சுகரதித்த, மகாகம, வளவகங்கை, சொரபொரவாவி, கம்பளை, இரணைமடு, யோதகால்வாய், கோகண்ன, சிலாபம், இப்பன்கட்டுவ, கதிர்காமம். (12 புள்ளிகள்)

ii) ரோம், இஸ்தான்புல், கோவா, பாக்குநீரிணை, பர்மா, யப்பான் (06 புள்ளிகள்)

(ஆ)

i) கீழே A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையாக உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. பத்தினித் தெய்வக் கோவில் ஒன்றின் திறப்பு விழாவிற்காக தென்னிந்தியாவின் சேர இராச்சியத்துக்குச் சென்ற இலங்கையின் இலம்பகர்ணவம்ச அரசன்.

B. சேனைப் பயிர்ச்செய்கைக்கு விதிக்கப்பட்டிருந்த கெதி அட, கெடுகனக ஆகிய வரிகளை நீக்கிய ஆட்சியாளன்

C. போர்த்துக்கேயரை முல்லேரியாப்போரில் படுதோல்வியடையச் செய்த சீதாவாக்கை ஆட்சியாளன்

D. கி.பி 1602 ஆம் ஆண்டு முதலாம் விமலதர்ம சூரிய மன்னனைச் சந்தித்த ஒல்லாந்து தூதுவன். (04 புள்ளிகள்)


- A,B எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

ii) 1. A இனால் குறித்துக்காட்டப்பட்ட நிர்மாணிப்பின் பெயர் என்ன?

2. இந்நிர்மாணிப்பு கண்டெடுக்கப்பட்ட தூபியின் பெயர் என்ன?

3. இந்நிர்மாணிப்பினை உருவாக்க பயன்படுத்தப்பட்ட உலோகம் யாது?

4. இந்நிர்மாணிப்பு கண்டெடுக்கப்பட்ட இடத்தில் பிறந்ததாக கருதப்படும் பொலன்னறுவையின் ஆட்சியாளனின் பெயர் என்ன?



**படம் A**

(04 புள்ளிகள்)



kalvi.lk

iii) *1.* B எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பெயர் என்ன?
*2.* மேற்படி கட்டடத்துடன் தொடர்புடைய சமயம் எது?
*3.* இது அமைந்துள்ள இலங்கையின் வரலாற்று நகரம் எது?
*4.* இதனை நிர்மாணித்த தென் இந்திய ஆட்சியாளர்கள் யார்?



**படம் B**

*(04 புள்ளிகள்)*

*02)*

i) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலமக்கள் வாழ்ந்ததாகக் கருதப்படும்
A. வெட்டவெளிவாழிடங்கள் இரண்டினையும்
B. ஈரவலய வெட்டவெளிப் பாசறைகள் ஒன்றினையும் பெயரிடுக? *(03 புள்ளிகள்)*

ii) முன்வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கு குறிப்பிடுக? *(04 புள்ளிகள்)*

iii) முன்வரலாற்றுக் காலத்தில் பின்பற்றப்பட்ட மரணச் சடங்கு முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக? *(05 புள்ளிகள்)*

iv) வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் பண்புகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? *(06 புள்ளிகள்)*

*03)*

i) பின்வரும் பதவிப் பெயர்களால் குறிப்பிடப்பட்டவர்களின் பணிகளை அதே ஒழுங்கில் தருக.
A. தொட்டபோஜக
B. மஹலேகம
C. அசஅதெக *(03 புள்ளிகள்)*

ii) கீழே A –D வரை புராதன காலத்தில் கைத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் தரப்பட்டுள்ளன. அக்கைத்தொழில்களை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.
A. கபர
B. தம்பகர
C. தடிக
D. குபகர *(04 புள்ளிகள்)*

iii) கமிகவின் பணிகள் மூன்று குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக? *(05 புள்ளிகள்)*

iv) புராதன இலங்கையில் அரசர்களின் கடமைகள் மூன்று குறிப்பிட்டு இரண்டினை விளக்குக? *(06 புள்ளிகள்)*

*04)*

i) அநுராதபுர காலத்தில் அமைக்கப்பட்ட பாரிய குளங்கள் மூன்று தருக? *(03 புள்ளிகள்)*

ii) பாரிய குளங்களை அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டமைக்கான காரணங்கள் நான்கு தருக? *(04 புள்ளிகள்)*

iii) குளத்தின் உறுப்புக்கள் மூன்று குறிப்பிட்டு அதில் ஒன்றின் தொழிற்பாடு குறித்து விளக்குக? *(05 புள்ளிகள்)*

iv) புராதன இலங்கையின் பொருளாதாரத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பிடம் பெற்றிருந்தது. மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? *(06 புள்ளிகள்)*



Education கல்வி
kalvi.lk

05)

i) கீழே A,B,C எனத் தரப்பட்ட தேசிய தலைவர்களால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களை அதே ஒழுங்கில் எழுதுக?

A. சுபதளபதி

B. ஆதிபாதன்

C. சங்கதளபதி (03 புள்ளிகள்)

ii) பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் நான்கு தருக? (04 புள்ளிகள்)

iii) கம்பளை இராசதானியின் விஷேட பண்புகளைக் குறிப்பிட்டு விளக்குக? (05 புள்ளிகள்)

iv) இரண்டாம் பராக்கிரமபாகுவின் அரசியல் பணிகள் இரண்டும் இலக்கிய பணி ஒன்றும் குறிப்பிட்டு விளக்குக? (06 புள்ளிகள்)

06)

i) செனரத் மன்னன் தனது பிள்ளைகளுக்காகக் கண்டி இராச்சியத்தினை மூன்று பிரிவுகளாகப் பிரித்தான். அப்பிரிவுகளின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

ii) கண்டி இராச்சியத்தின் பிரதம பிரதானி எனப்பட்ட பல்லே கம்பா பிரதானியாவில் நிர்வகிக்கப்பட்ட நான்கு பிரதேசங்களைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

iii) கண்டி அரசனின் அதிகாரங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக? (05 புள்ளிகள்)

iv) கண்டி இராச்சிய கால நீதிமன்ற நடவடிக்கைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? (06 புள்ளிகள்)

07)

i) பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிக் கொள்வதற்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்த ஆங்கிலேயத் தூதுவர்கள் மூவரின் பெயரைத் தருக? (03 புள்ளிகள்)

ii) 1803 ஆம் ஆண்டு பிரித்தானியர் கண்டி மீது படையெடுப்பினை மேற்கொண்டமைக்கான காரணங்கள் நான்கு தருக? (04 புள்ளிகள்)

iii) 1815 இல் கண்டி இராச்சியத்தைப் பிரித்தானியர் கைப்பற்றுவதற்கு ஏதுவாக இருந்த காரணங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக? (05 புள்ளிகள்)

iv) 1848 சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்த காரணிகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக? (06 புள்ளிகள்)

## பகுதி III

08)

i) 12 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வர்த்தக முன்னேற்றத்துடன் தோற்றம் பெற்ற மத்திய தர வர்க்கத்தினர் ஈடுபட்ட துறைகளில் மூன்றினைத் தருக. (03 புள்ளிகள்)

ii) மறுமலர்ச்சிக்காலத்தில் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

iii) புதியவர்த்தகப் பாதை கண்டுபிடிக்கப்பட்டமைக்கான பின்னணியை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக? (05 புள்ளிகள்)

iv) மறுமலர்ச்சி இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? (06 புள்ளிகள்)



kalvi.lk

09)

i) பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி முதன்முதலில் ஏற்பட்ட மூன்று துறைகளையும் தருக? *(03 புள்ளிகள்)*

ii) பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் நான்கு தருக? *(04 புள்ளிகள்)*

iii) கைத்தொழில் புரட்சி தொடர்பாடல் துறையில் ஏற்படுத்திய வளர்ச்சியை இருகாரணிகளின் அடிப்படையில் விளக்குக? *(05 புள்ளிகள்)*

iv) கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட சமூக மாற்றங்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? *(06 புள்ளிகள்)*

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page